10th std

# Unit - 1

# Indian Constitution




ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A.) தோன்றியது.

The Constitution is the fundamental law of a country which reflects the fundamental principles on which the government of that country is based. It is the vehicle of a Nation's progress. The concept of constitution was first originated in U.S.A.

## 1.2 இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

1946ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) மற்றும் பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர். அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம், 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் டாக்டர். சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே அவர் இறந்ததைத் தொடர்ந்து, டாக்டர். இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு

## 1.2 Making of Indian Constitution

The Constitution of India was framed by a Constituent Assembly setup under the Cabinet Mission Plan, 1946. The Assembly consisted of 389 members representing Provinces (292), States (93), the Chief Commissioner's provinces (3) and Baluchistan (1). The Assembly held its first meeting on December 9, 1946.

Dr. Sachchidananda Sinha, the oldest member was elected as the temporary President of the Assembly. While the work was in progress Dr. Sahchidananda Sinha died. Dr. Rajendra Prasad was elected as the President of the Assembly. Similarly, both H.C. Mukherjee and V.T. Krishnamachari were elected as the Vice-Presidents of the Assembly. The Assembly met for 11 sessions along with 166 days of meetings. During the discussion, 2473 amendments were presented. Some of them were accepted. The

| | |
|---|---|
| இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் டாக்டர். B.R. அம்பேத்கர் தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே அவர் "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என அறியப்படுகிறார். | Assembly worked through various committees and the draft of the Constitution was prepared by the Drafting Committee under the chairmanship of Dr. B.R. Ambedkar. He is recognised as the 'Father of the Constitution of India'. |
| இறுதியாக முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது. | and others, the Constitution was finally adopted on November 26, 1949, contained a Preamble, 22 parts, 395 Articles and 8 Schedules. The drafted Constitution came into force on 26$^{th}$ January, 1950. This day is known as the Republic Day. It is being observed every year. |
| **உங்களுக்குத் தெரியுமா?** பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது. | **DO YOU KNOW?** Prem Behari Narain Raizada was the calligrapher of the Indian Constitution. The original constitution was handwritten by him in a flowing italic style. |

## 1.3 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (நடுவண், மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

## 1.3 Salient features of Indian Constitution

- It is the lengthiest of all the written constitutions of the world.
- It has borrowed most of its provisions from the constitutions of various countries.
- It is partly rigid and partly flexible.
- It establishes a federal system of government.
- It makes India as a secular state.
- It provides an independent judiciary.
- It introduces Universal Adult Franchise and accords the right to vote to all citizens above 18 years of age without any discrimination.

## 1.4 முகவுரை

'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது. இது பெரும் மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.

1947ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவகர்லால் நேருவின் 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. முகவுரையானது 1976ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி ஒருமுறை திருத்தப்பட்டது. அதன்படி, சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு போன்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன. 'இந்திய மக்களாகிய நாம்' என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது. இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் அறியலாம். இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.

## 1.4 Preamble

The term 'preamble' refers to the introduction or preface to the Constitution. It consists of the ideals, objectives and basic principles of the Constitution. It has great value and has been described as the 'key to the Constitution'.

The Preamble to the Indian Constitution is based on the 'Objective Resolution', drafted by Jawaharlal Nehru, which was adopted by the Constituent Assembly on January 22, 1947. It has been amended once by the 42$^{nd}$ Constitutional Amendment Act of 1976, which added three new words - socialist, secular and integrity. The Preamble begins with the phrase 'We, the People of India'. Thus, we can say that the people of India are the source of our Constitution. The Preamble of our Constitution states that India is a **Sovereign Socialist Secular Democratic Republic**. Its aim is to secure to all Indian citizens Social, economic and political justice.

| | |
|---|---|
| இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.<br><br>**உங்களுக்குத் தெரியுமா?**<br>1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம்,சகோதரத்துவம் ஆகியன முக்கிய முழக்கங்களாயின. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. | **DO YOU KNOW?**<br>Liberty, Equality and Fraternity were the important slogans during the French Revolution in 1789. They are given importance in the Preamble of our Constitution. |

## 1.5 குடியுரிமை

'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும். இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது. இந்திய அரசியலமைப்பின் பகுதி II சட்டப்பிரிவுகள் 5 லிருந்து 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.

### குடியுரிமைச் சட்டம் (1955)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு, 1955ல் இயற்றப்பட்ட குடியுரிமைச்சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறது. இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் ஒன்பது முறை திருத்தப்பட்டுள்ளது.

## 1.5 Citizenship

The word 'Citizen' is derived from the Latin term 'Civis'. It means resident of a City State. The Constitution of India provides for a single and uniform citizenship for the whole of India. Articles 5 to 11 under part II of the Constitution deals with the citizenship.

### Citizenship Act (1955)

The Citizenship Act of 1955 provides for acquisition and loss of citizenship after the commencement of the Constitution. This Act has been amended so far nine times.

## குடியுரிமை பெறுதல்

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமை பெறமுடியும்.

1. **பிறப்பின் மூலம்:** 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.

2. **வம்சாவளி மூலம்:** 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை (அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.

3. **பதிவின் மூலம்:** ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

4. **இயல்புரிமை மூலம்:** ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

5. **பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்:** பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்.

## Acquisition of Citizenship

According to the Citizenship Act, 1955, the citizenship could be acquired through any of the following methods.

1. **By Birth**: All persons born in India on or after January 26, 1950 are treated as citizens by birth.

2. **By Descent:** A person born outside India on or after January 26, 1950 shall be a citizen of India by descent, if his father is a citizen of India at the time of his birth.

3. **By Registration:** A person can acquire citizenship of India by registration with appropriate authority.

4. **By Naturalisation:** A foreigners can acquire Indian citizenship, on application for naturalization to the Government of India.

5. **By Incorporation of Territory**: In the event of a certain territory being added to the territory of India, the Government of India shall specify the persons of that territory who shall be citizen of India.

## குடியுரிமையை இழத்தல்

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி, ஒருவர் தன் குடியுரிமையை, சட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகவோ (அ) அரசியலமைப்பின் கீழ் முன்னுரிமையால் பெறப்பட்டதாகவோ இருக்கும்பட்சத்தில் பெற்ற குடியுரிமையைத் துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற பின்வரும் மூன்று வழிகளில் இழப்பார்.

1. ஒரு குடிமகன் தாமாக முன்வந்து தனது குடியுரிமையை துறத்தல்.
2. வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும்போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.
3. இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர் (அ) உண்மைகளை மறைத்தவர் (அ) எதிரி நாட்டுடன் வாணிகம் செய்தவர் அல்லது இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை நடுவண் அரசு கண்டறிந்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திப்படும் பட்சத்தில் நடுவண் அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

## Loss of Citizenship

The Citizenship Act of 1955 prescribes three ways of losing citizenship whether acquired under the Act or prior to it under the Constitution, viz, renunciation, termination and deprivation.

1. It can be voluntarily renounced by a citizen
2. It can be terminated if a person acquires the citizenship of some other country.
3. The central government can deprive a naturalized citizen, if it satisfied that the citizenship was acquired by fraud false representation or concealment of material facts or indulges in trade with enemy countries or if the person has been sentenced to imprisonment for a period of 2 years.

## 1.6 அடிப்படை உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12ல்இருந்து35வரையுள்ளசட்டப்பிரிவுகள்அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள். முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது. ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.

## 1.6 Fundamental Rights

The Fundamental Rights are enshrined in Part III of the Constitution from Articles 12 to 35. In this regard, the framers of the Constitution derived inspiration from the Constitution of USA. Originally, the Constitution provided for seven Fundamental Rights. At present, there are only six Fundamental Rights. Part III of the Constitution is rightly described as the Magna Carta of India. While Fundamental Rights are available to all persons, certain Fundamental Rights are available only to Indian Citizens.

## அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு – 32)

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும். உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன. இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது. டாக்டர். B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.

## Right to constitutional remedies (Articles - 32)

A writ is an order or command issued by a court in writing under its seal. It is in the nature of a command or prohibition from performing certain acts that are specified in the orders of the court. Both the Supreme Court and the High Courts are empowered to issue five kinds of writs. That is why the Supreme Court is called the "Guardian of the Constitution". According to Dr. Ambedkar, Article 32 is "the heart and soul of the Constitution".

அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas Corpus)

சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

ஈ) ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)

உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo–Warranto)

இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

(a) **Habeas Corpus:**

Safeguards people from illegal arrests.

(b) **Mandamus:**

It protects the petitioner who requires legal help to get his work done by respective public authorities.

(c) **Prohibition:**

It prohibits a subordinate court from acting beyond its jurisdiction.

(d) **Certiorari:**

It quashes an order issued by a subordinate court by overstepping its jurisdiction.

(e) **Quo Warranto:**

It prevents usurpation of public office through illegal manner.

### அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் குடியரசுத்தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது. மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத்தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யலாம். குடியரசுத்தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## Suspension of Fundamental Rights

When the President makes a Proclamation of Emergency under Article 352, the freedoms guaranteed under Article 19 are automatically suspended. The President can suspend other fundamental rights through specific orders. These orders must be approved by the Parliament.

### I. சமத்துவ உரிமை



- பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்தல்.
- பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.
- பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.
- பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

### I. RIGHT TO EQUALITY



- Art. 14 - Equality before law.
- Art. 15 - Prohibition of discrimination on grounds of religion, race, caste, sex or place of birth.
- Art. 16 - Equality of opportunity in matters of public employment.
- Art. 17 - Abolition of Untouchability.
- Art. 18 - Abolition of titles except military and academic.

## II. சுதந்திர உரிமை




பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 A – தொடக்கக்கல்வி பெறும் உரிமை.

பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

## II. RIGHT TO FREEDOM




Art. 19 - Freedom of speech and expression, assembly, association, movement, residence and profession.

Art. 20 - Protection in respect of conviction for offences.

Art. 21 - Protection of life and personal liberty.

Art. 21A - Right to elementary education.

Art. 22 - Protection against arrest and detention in certain cases.

## III. சுரண்டலுக்கெதிரான உரிமை



**பிரிவு 23** – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

**பிரிவு 24** – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

## III. RIGHT AGAINST EXPLOITATION



**Art. 23** - Prohibition of traffic in human beings and forced labour.

**Art. 24** - Prohibition of employment of children in factories, etc.

## IV. சமயச்சார்பு உரிமை



**பிரிவு 25** – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

**பிரிவு 26** – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

**பிரிவு 27** – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

**பிரிவு 28** – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

## IV. RIGHT TO RELIGION



**Art. 25** - Freedom of conscience and free profession, practice and propagation of religion.

**Art. 26** - Freedom to manage religious affairs.

**Art. 27** - Freedom from payment of taxes for promotion of any religion.

**Art. 28** - Freedom from attending religious instruction or worship in certain educational institutions.

## V. கல்வி, கலாச்சார உரிமை



பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

## V. CULTURAL & EDUCATIONAL RIGHTS



Art. 29 - Protection of language, script and culture of minorities.

Art. 30 - Right of minorities to establish and administer educational institutions.

## VI. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை



பிரிவு 32 – தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

## VI. RIGHT TO CONSTITUTIONAL REMEDIES



Art. 32 - It allows individuals to seek redressal for the violation of their fundamental rights.

## 1.7 அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக எந்தவொரு வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள–அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானவை. சமுதாய நலனை மக்களுக்குத் தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என டாக்டர். B.R. அம்பேத்கர் இதனை விவரிக்கிறார்.

## 1.7 Directive Principles of State Policy

The Directive Principles of State Policy are enumerated in Part IV of the Constitution from Articles 36 to 51. The Constitution does not contain any classification of Directive Principles. However, on the basis of their content and direction, they can be classified into three broad categories, viz, socialistic, Gandhian and liberal-intellectual. These principles are not enforceable by the courts.

But they are fundamental for the governance of the country. They aim at promoting the Social Welfare of the people. Dr. B.R. Ambedkar described these principles as 'novel features' of the Indian Constitution.

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை . |
| அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது |
| இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன . | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

| Fundamental Rights | Directive Principles of State Policy |
|---|---|
| It was derived from the Constitution of the USA. | It was drawn on the model of the Constitution of Ireland. |
| Even the Government cannot take away or abridge these rights. | These are mere instructions to the Government. |
| These are enforceable by a court of law. | These are not enforceable in any court. |
| These have legal sanctions. | These have moral and political sanctions. |
| These rights strengthen political democracy in the country. | The implementation of these principles ensures social and economic democracy. |

| | |
|---|---|
| 2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21A வின் கீழ் தொடக்கக்கல்வி, அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை (Early Childhood Care and Education – ECCE) 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது. | The 86th Amendment Act of 2002 changed the subject -matter of Article 45 and made elementary education a fundamental right under Article 21 A. The amended directive requires the State to provide early childhood care and education for all children until they complete the age of six years. |

## 1.8 அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) [ரஷ்யா] அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும். 1976ஆம் ஆண்டு, அமைக்கப்பட்ட சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன. மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி IV A என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. இந்தப் புதிய பகுதி 51 A என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது. இது குடிமக்களின் 11 அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது.

## 1.8 Fundamental Duties

The Fundamental Duties in the Indian Constitution are inspired by the Constitution of former USSR (Russia). In 1976, the Congress party set up the Sardar Swaran Singh Committee to make recommendations on fundamental duties. The 42nd Amendment Act of 1976 added some responsibilities of citizens to our Constitution called the Fundamental Duties. This amendment added a new part, namely, Part IVA to the Constitution. This new part consists of only one Article that is Article 51A which for the first time specified a code of eleven fundamental duties of the citizens.

### அடிப்படைக் கடமைகளின் பட்டியல்

அ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் ஆகியவற்றை மதித்தல்.



### List of Fundamental Duties

(a) To abide by the constitution and respect its ideals and institutions, the National Flag and the National Anthem.

ஆ) சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.

இ) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

ஈ) தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.

உ) சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.

ஊ) நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.

எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.

(b) To cherish and follow the noble ideals which inspired the national struggle for freedom

(c) To uphold and protect the sovereignty, unity and integrity of India



(d) To defend the country and render national service when called upon to do so

(e) To promote harmony and the spirit of common brotherhood among all the people of India transcending religious, linguistic and regional or sectional diversities; to renounce practices derogatory to the dignity of women

(f) To value and preserve the rich heritage of our composite culture

(g) To protect and improve the natural environment including forests, lakes, rivers and wildlife, and to have compassion for living creatures

| | |
|---|---|
| ஏ) அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல். | (h) To develop scientific temper, humanism and the spirit of inquiry and reform |
| ஐ) வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல். | (i) To safeguard public property and to abjure violence |
| ஒ) தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல். | (j) To strive towards excellence in all spheres of individual and collective activity, so that the nation constantly rises to higher levels of endeavour and achievement |
| ஓ) 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல். (86வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2002இன் படி 51A (k) கீழ் 11வது அடிப்படை கடமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்). | (k) To provide opportunities for education to his child or ward between the age of six and fourteen years. (The 86th Constitutional Amendment Act, 2002 has also introduced the 11th Fundamental Duty under 51A(k) under which all citizens of India or parents shall provide opportunities for education to their children between age of 6 and 14 years) |

## 1.9 நடுவண்–மாநில உறவுகள்

### சட்டமன்ற உறவுகள்

நடுவண் நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, நடுவண்–மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது. அவை நடுவண் பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது. நடுவண் அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியலில் சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன. ஆனால், நடுவண் அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் குறித்து சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால், நடுவண் அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.

## 1.9 Centre-State Relations

### Legislative relations

The Union Parliament has the power to legislate for the whole or any part of the territory of India, which includes not only the States but also the Union Territories or any other area for the time being, included in the territory of India. The Seventh Schedule of the Constitution embodies three lists namely, the Union List, State List and Concurrent List consisting of 97, 66 and 47 items respectively. The Parliament enjoys the exclusive power to legislate on subjects enumerated in the Union List. The State Legislature has exclusive right to legislate on the State List. Both Parliament and State Legislatures have power to legislate on subjects contained in the Concurrent. List. But in case of conflict between the law of the State and the Union on a subject in the Concurrent List, the law of Parliament prevails.

**உங்களுக்குத் தெரியுமா?**

தற்போது அதிகாரப் பகிர்வு என்பது நடுவண் அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை, கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

**DO YOU KNOW?**

The Union List, State List and Concurrent List consisting at present 100, 61 and 52 items respectively. The 42$^{nd}$ Amendment Act of 1976 transferred five subjects to Concurrent List from State List, that is, education, forests, weights and measures, protection of wild animals and birds, and administration of justice; constitution and organisation of all courts excepts the Supreme Court and the high courts.

## நிர்வாக உறவுகள்

ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது. அதே வேளையில், நடுவண் அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது. அவை, அ) நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம், ஆ) மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

## Administrative relations

The Administrative power of a State extends only to its own territory and with respect to which it has legislative competence, whereas the Union has exclusive executive power over: (a) the matters with respect to which Parliament has exclusive power to make laws and (b) the exercise of its powers conferred by any treaty or agreement.

## நிதி உறவுகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி XII சட்டப்பிரிவு 268ல் இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் நடுவண்–மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது.

நடுவண்–மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280ன் கீழ் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், நடுவண் அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, நடுவண் அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

நடுவண் – மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் 1983ஆம் ஆண்டு சர்க்காரியா குழுவினை நியமித்தார். அக்குழுவின் 247 பரிந்துரைகளில் 180 பரிந்துரைகளை நடுவண் அரசு செயல்படுத்தியது.

## Financial relations

Article 268-293 in Part XII deal with the Financial relations between centre and the states. The Centre and States are empowered by the Constitution to impose various kinds of taxes. And certain taxes are imposed and collected by the centre and divided between centre and states based on the recommendation of the Finance Commission appointed by the President under Article 280 of the Constitution.

Late Prime Minister Indira Gandhi appointed the Sarkaria Commission in 1983 to make an enquiry into the Centre-State relations. The Central government has implemented 180 (out of 247) recommendations of the Commission.

**உங்களுக்குத் தெரியுமா?**

1969இல் நடுவண்–மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு டாக்டர். P.V. இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

**DO YOU KNOW?**

In 1969, the Tamil Nadu Government appointed a three-member committee under the chairmanship of Dr. P V Rajamannar to examine the entire question of Centre-state relations.

## 1.10 அலுவலக மொழிகள்

அரசியலமைப்பு சட்டப் பகுதி XVIIஇல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன. தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

2004ஆம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி இதுவரை 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை, தமிழ்(2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு(2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

## 1.10 Official Language

Part XVII of the Constitution deals with the official language in Articles 343 to 351. Initially, the Constitution recognised 14 regional languages which were included in the Eighth Schedule. At present, 22 languages are recognised.

DO YOU KNOW?

In 2004, the Government of India decided to create new category of languages called as "classical languages". So far, the six languages are granted the classical language status namely Tamil (2004), Sanskrit (2005), Telugu (2008), Kannada (2008), Malayalam (2013) and Odia (2014).

## செம்மொழிகள் [ தொகு ]

இந்தியச் செம்மொழிகளின் பட்டியல்

| மொழிகள் | அங்கீகார ஆண்டு |
|---|---|
| தமிழ் | 2004 |
| சமஸ்கிருதம் | 2005 |
| தெலுங்கு | 2008 |
| கன்னடம் | 2008 |
| மலையாளம் | 2013 |
| ஒடியா | 2014 |
| பாளி மொழி | 2024 |
| பிராகிருதம் | 2024 |
| மராத்திய மொழி | 2024 |
| அசாமிய மொழி | 2024 |
| வங்காள மொழி | 2024 |

## இந்தியாவின் செம்மொழிகள்

| மொழிகள் | அறிவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| 1. தமிழ் | 2004 |
| 2. சமஸ்கிருதம் | 2005 |
| 3. தெலுங்கு | 2008 |
| 4. கன்னடம் | 2008 |
| 5. மலையாளம் | 2013 |
| 6. ஒடியா | 2014 |
| 7. பாலி | 2024 |
| 8. பிராகிருதம் | 2024 |
| 9. மராத்தி | 2024 |
| 10. அஸ்ஸாமி | 2024 |
| 11. பெங்காலி | 2024 |

Subscribe

## தேசிய அவசரநிலை (சட்டப்பிரிவு 352)

போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத்தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம். போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசரநிலை' எனப்படுகிறது. ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படுகிறது. இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

## National Emergency (Article 352)

The President under Article 352 can declare emergency if he is satisfied that India's security is threatened due to war, external aggression or armed rebellion, or if there is an imminent danger or threat. When a national emergency is declared on the ground of war or external aggression it is known as external emergency. On the other hand, when it is declared on the ground of armed rebellion it is known as internal emergency. This type of emergency has been declared three times so far: in 1962, 1971 and 1975.

| மாநில அவசரநிலை (சட்டப்பிரிவு 356) | State emergency (Article 356) |
|---|---|
| ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும்பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.இந்தஅவசரநிலை,சட்டப்பிரிவு352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும். அதிகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்கமுடியும். மாநிலமானது, குடியரசுத்தலைவர் சார்பாக ஆளுநரால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தியாவில் முதன்முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது. | Under Article 356, the President can declare an emergency in a state if the Governor reports that a situation has arisen under which the government of a State cannot be carried on in accordance with the provisions of the Constitution. The continuance of such an emergency beyond one year is possible only if emergency under Art. 352 are in operation or the Election Commission certifies that there are difficulties in holding Assembly elections. Maximum duration of the emergency can be three years. The State is governed by the Governor on behalf of the President. For the first time, the President's Rule was imposed in Punjab in 1951. |

### நிதி சார்ந்த அவசரநிலை (சட்டப்பிரிவு 360)

நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதிகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத்தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம். இந்த வகையான அவசர நிலையில் நடுவண்–மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத்தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும். இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

### Financial emergency (Article 360)

Article 360 authorises the President to declare financial emergency if he is satisfied that the financial stability or credit of India or of any of its parts is in danger. In this type of emergency, salaries and allowances of any class of persons serving State or Union, including judges of the Supreme Court and High Court can be reduced by an order of the President. This type of emergency has not been declared in India so far.

## 1.12 அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

'அமெண்ட்மெண்ட்' (Amendment) எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. அரசியலமைப்பின் சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

## 1.12 Amendment of the Constitution

The term amendment denotes change, improvement and modification. Article 368 of the Constitution in Part XX, deals with the powers of Parliament to amend the Constitution and its procedure.

## அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3 ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும். குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரமுடியும். மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

## Procedure of Amendment

An amendment of this Constitution may be initiated only by the introduction of a Bill for the purpose in either House of Parliament, and when the Bill is passed in each House by a majority of the total membership of that House and by a majority of not less than two-thirds of the members of that House present and voting, it shall be presented to the President who shall give his assent to the Bill and thereupon the Constitution shall stand amended in accordance with the terms of the Bill. The constitution amendment can be brought about only by the Parliament. State legislatures cannot initiate for any amendment to the Constitution.

## அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்

அரசியலமைப்பின் 368வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது.

1. நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
2. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
3. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்.




அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் 'சிறு அரசியலமைப்பு' என அறியப்படுகிறது.

## Types of Amendments

Article 368 provides for three ways of amendments.

1. Amendment by simple majority of the Parliament
2. Amendment by special majority of the Parliament
3. Amendment by special majority of the Parliament and the ratification of half of the state legislatures.




42nd amendment of the Constitution is known as the mini Constitution.

## 1.13 அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்

அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின் படி திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது. அரசின் பல்வேறு நிலைகள், அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி M.M. பூஞ்சி தலைமையில் ஏப்ரல் 2007 ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆணையத்தை அப்போதைய அரசு அமைத்தது.

## 1.13 Constitutional Reform Commissions

The National Commission to Review the Working of the Constitution was set up by a resolution of the Government of India in 2000 headed by M.N.Venkatachaliah. In April 2007, a three member commission headed by the former Chief Justice of India M.M.Punchchi was set up by the then Government to take a fresh look at relative roles and responsibilities of various levels of Government and their inter-relations.

# அலகு – 2

## நடுவண் அரசு




இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு நடுவண் அரசு ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் பகுதி Vஇல் 52 முதல் 78 வரையிலான சட்டப்பிரிவுகள் நடுவண் அரசின் நிர்வாகம் பற்றி குறிப்பிடுகின்றன. இந்திய

The Central Government is the supreme government in our country. The head quarter of the Central Government is at New Delhi. Articles 52 to 78 in part V of Indian Constitution deals with the Union Executive.


நடுவண் அரசு
நிர்வாகம்
சட்டமன்றம்
நீதித்துறை
இந்தியக் குடியரசுத் தலைவர்
துணைக் குடியரசுத் தலைவர்
பிரதம அமைச்சர்
அமைச்சரவைக் குழு
நாடாளுமன்றம்
மாநிலங்களவை (ராஜ்ய சபா)
மக்களவை (லோக் சபா)
543 உறுப்பினர்கள் (மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்)
2 உறுப்பினர்கள் (குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆங்கிலோ–இந்தியர்கள்)
238 உறுப்பினர்கள் (இந்தியாவின் மாநில சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்)
12 உறுப்பினர்கள் (குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்டவர்கள்)
இந்திய உச்ச நீதிமன்றம்
இந்தியத் தலைமை நீதிபதி
மற்ற நீதிபதிகள்


Central Government
Executive
Legislature
Judiciary
President of India
Parliament
Supreme Court of India
Vice-President
Rajya Sabha
Lok Sabha
Chief Justice of India
Prime Minister
238 Elected by the State Assemblies
12 Nominated by the President
Other Judges 27
Council of Ministers
543 Elected by the people
2 Nominated by the President

| | |
|---|---|
| அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்தியாவின் பரந்த மற்றும் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்தியாவிற்கு கூட்டாட்சி முறையிலான அரசை வழங்கியுள்ளனர். நடுவண் அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியனவாகும். நடுவண் நிர்வாகம் என்பது குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும். நடுவண் சட்டமன்றமானது நாடாளுமன்றம் என்றழைக்கப்படுகிறது.<br><br>இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா) ஆகியனவாகும். நடுவண் நீதித்துறை உச்ச நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. | character of our nation, have provided a federal arrangement for her governance. The Central Government consists of three organs, namely, Union Executive, Legislature and Judiciary. The Union Executive consists of the President of India, the Vice-President, and the Council of Ministers headed by the Prime Minister, and the Attorney General of India. The Legislature is known as the Parliament. |

## 2.1 இந்தியக் குடியரசுத் தலைவர்



டாக்டர். ராஜேந்திர பிரசாத்
(முதல் குடியரசுத் தலைவர்)

நடுவண் அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். அவர் பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்றவர். அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். முப்படைகளின் தலைமை தளபதியாகச் செயல்படுகிறார். நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவராகவும் உள்ளார். அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 53ன் படி குடியரசுத் தலைவர் நேரடியாகவோ அல்லது அவருடைய சார்நிலை அலுவலர்கள் மூலமாகவோ நடுவண் அரசின் நிர்வாக அதிகாரங்களை அரசியலமைப்பின்படி செயல்படுத்துகிறார்.

## 2.1 The President of India



**DR. RAJENDRA PRASAD**
**(First President of India)**

The President is the nominal executive authority. The chief executive of the Indian union is the President. He is designated as the First citizen of India. He is the supreme commander of the armed forces. The President is also the Constitutional head of the Union Executive. According to Article 53 of the constitution, the executive power of the Union shall be vested in the President which shall be exercised by him directly or through officers subordinate to him in accordance with Constitution.

இந்திய அரசியலமைப்பின் 53வது சரத்து கூறுவதாவது: இந்தியக் குடியரசுத் தலைவரே நாட்டின் அரசியலமைப்புத் தலைவர் என்பதால், ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரம் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் உள்ளது.

Article-53 of the Indian constitution says. The executive power of the Union Vest in the President of India because of President of India is the constitutional Head of the state.

சரத்து 58 -குடியரசுத் தலைவர் பதவிக்கான தகுதிகள் பற்றி விளக்குகிறது.

### தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- நடுவண் அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் குழுமத்திலுள்ள 50 வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் 50 வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது. ஒருவேளை பதவி வகிக்கும் பட்சத்தில் குடியரசுத் தலைவராக அவர் பதவி ஏற்கும் நாளில் அப்பதவி காலியானதாகக் கருதப்படும்.

Article 58 explains the qualifications for the office of the President.

### Qualification for the election as President

- He should be a citizen of India.
- He must have completed the age of 35years.
- He must not hold any office of profit under the Union, State or local Government.
- He should have the other qualifications required to become a member of the Lok Sabha.
- His or her name should be proposed by at least 50 electors and seconded by another 50 electors of the Electoral College which elects the President.

The President cannot be a Member of Parliament or of a State Legislature; if he is a member of any legislature, his seat will be deemed to have been vacated on the date he / she assumes the office of President.

| | |
|---|---|
| **உங்களுக்குத் தெரியுமா?** புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் – குடியரசுத் தலைவரின் இல்லம் ஆகும். அவருடைய இல்லம் மற்றும் அலுவலகம் இரண்டும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன. இருந்த போதிலும் அவருக்கு இருப்பிடத்துடன் கூடிய அலுவலகங்கள் மேலும் இரண்டு இடங்களில் உள்ளன. அங்கு வருடத்திற்கு ஒரு முறை சென்று தன்னுடைய அலுவலக பணிகளை அவர் மேற்கொள்கிறார். அவைகள் சிம்லாவில் உள்ள ரிட்ரீட் கட்டடம் (The Retreat Building) மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ராஷ்டிரபதி நிலையம் ஆகும். இவைகளில் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் அமைந்துள்ளது. இது நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் பல்வேறுபட்ட கலாச்சாரத்தின் ஒற்றுமையையும் பறைசாற்றுகின்றது. | **DO YOU KNOW?** It is a well known fact that the President of India resides at Rashtrapati Bhavan in New Delhi. The residence and the office of the President are located in the same building. However he has two other office cum residences where he conducts office at least once a year. They are 'The Retreat Building' at Shimla and the 'Rashtrapati Nilayam' at Hyderabad. These locations one in North and other one is South symbolise the unity of the country and unity of the diverse culture of the people. |
| இந்திய அரசியலமைப்பின் 54வது பிரிவு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது பற்றிக் கூறுகிறது | Article 54 of the Indian Constitution deals with the election of the President. |
| பிரிவு 55, ஜனாதிபதியின் தேர்தல் முறையை கோடிட்டுக் காட்டுகிறது, இது ரகசிய வாக்கெடுப்பு மூலம் ஒற்றை மாற்றத்தக்க வாக்கைப் பயன்படுத்தி விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது | Article 55 of the Indian Constitution outlines the manner of election of the President, specifying that it should be conducted through a system of proportional representation using a single transferable vote by secret ballot. |

| | |
|---|---|
| **குடியரசுத் தலைவருக்கானத் தேர்தல்** Art 54 & 55<br>குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.<br>வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார். குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதி உடையவர் ஆவார். | **Election of the President**<br>The President is elected by an electoral college in accordance with the system of proportional representation by means of single transferable vote. The Electoral College consists of the elected members of both houses of Parliament and the elected members of the states and elected members of National Capital Territory of Delhi and Puducherry. Once elected as the President has to take an oath of office before the Chief Justice of India. The President is elected for a term of five years and can be re-elected. |
| 1991 -ம் ஆண்டு 70-வது சட்டதிருத்தத்தின்படி 1995 ஆண்டில் இருந்து டெல்லி மற்றும் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்கள் இத்தேர்தலில் பங்கேற்கின்றனர். | According to the 70th amendment of 1991, the members of the Delhi and Puducherry legislative assemblies have been participating in this election since 1995. |

## குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்

### நிர்வாக அதிகாரங்கள்

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 77ன் படி நடுவண் அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரதம அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார். இந்தியாவின் மிக முக்கிய பதவிகளான மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள், இதர நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்,

தலைமைக் கணக்கு தணிக்கையாளர், இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள், நடுவண் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள், மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

## Powers of the President

### Executive Powers

Article 77 requires that every executive action of the Union shall be taken in the name of the President.

He appoints the Prime Minister and the other members of the Council of Ministers, distributing portfolios to them on the advice of the Prime Minister. He is responsible for making a wide variety of appointments. These include the appointment of Governors of States, the Chief Justice and other Judges of the Supreme Court and high Courts, the Attorney General, the Comptroller and Auditor General, the Chief Election Commissioner and other Election Commissioners, the Chairman and other Members of the Union Public Service Commission, Ambassadors and High Commissioners to other countries.

## சட்டமன்ற அதிகாரங்கள்

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார். மேலும் ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது. குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.

அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தியை நாடாளுமன்றத்திற்கு அனுப்பலாம். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன. நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ அல்லது ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத்தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

## Legislative Powers

He inaugurates the session of the Parliament by addressing it after the general election and also at the beginning of the first session each year. This address is essentially identical in nature to a Speech from the Throne.The President summons Parliament at least twice in a year.

He may send messages to either House of the Parliament with respect to a bill pending in the House. All bills passed by the Parliament become "Laws of Acts" only after getting assent of the President. Money bills cannot be introduced in the Parliament without his approval. President terminates the sessions of both or any of the Houses of Parliament. He can even dissolve the Lok Sabha before the expiry of the term of the House.

| | |
|---|---|
| இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார். மேலும் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். | He nominates 12 persons who are eminent in literature, science, sports, art and social service to the Rajya Sabha. He can also nominate two persons belonging to Anglo-Indian Community to the Lok Sabha, if in his opinion, that community is inadequately represented in the House. |
| **நிதி அதிகாரங்கள்**<br>நடுவண் அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே நடுவண் நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசரகால நிதியினைக் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. அவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையையும் கொண்டுவர முடியாது. இந்தியாவின் அவசர நிதியிலிருந்து அரசின் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கிறார். | **Financial Power**<br>Annual Budget of the Central Government is presented before the Lok Sabha by the Union Finance Minister only with the permission of the President. The Constitution of India places the Contingency Fund of India is at the disposal of the President. No demand for a grant can be made except on his recommendation. He can make advances out of the contingency fund of India to meet any unexpected expenditure. He constitutes a finance commission after every five years. |

### நீதி அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72–வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

### இராணுவ அதிகாரங்கள்

நடுவண் அரசின் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தைச் சட்டப்பிரிவு 53(2) குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவர் சட்டத்தின்படி இராணுவத்தை வழிநடத்துகிறார்.

### Judicial Powers

Article 72 confers on the President power to grant pardons, reprieves, respites or remissions of punishment, or to commute the sentence of any person convicted of an offence.

### Military Powers

Article 53(2) lays down that “the supreme command of the Defence Force of the Union shall be vested in the President and the exercise thereof shall be regulated by law”.

| | |
|---|---|
| **இராஜதந்திர அதிகாரங்கள்**<br><br>வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார். வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகின்றன.<br><br>**நெருக்கடி நிலை அதிகாரங்கள்**<br><br>நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரம் 352வது சட்டப்பிரிவிலும், மாநில அரசை கலைக்கும் அதிகாரம் 356வது சட்டப்பிரிவிலும், நிதி நெருக்கடியை அறிவிக்கும் அதிகாரம் 360வது சட்டப்பிரிவிலும் உள்ளது. | **Diplomatic Powers**<br><br>The President appoints Indian diplomats to other countries and receives foreign diplomats posted to India. The ambassador designate becomes ambassador after calling on the President and presenting his credentials. All treaties and agreements with foreign States are entered into, in the name of the President.<br><br>**Emergency Powers**<br><br>The President has been empowered by the Constitution to proclaim National Emergency under Article 352, State Emergency under Article 356, Financial Emergency under Article 360. |
| குடியரசுத் தலைவரின் பதவிப் பிரமாணம் மற்றும் உறுதிமொழிகள் (சரத்து 60)<br>• இந்தியாவின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கின்றார்.<br>• தலைமை நீதிபதி இல்லாத போது உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதி அப்பதவி பிரமாணத்தை செய்து வைக்கின்றார்.<br>• தற்காலிக குடியரசுத் தலைவராக செயல்படும் நபர்களும் கட்டாயம் பதவிப்பிரமாணம் எடுக்க வேண்டும். | The President's Oath of Office and Affirmations (Article 60)<br>• The Chief Justice of the Supreme Court of India administers the oath of office to the President.<br>• In the absence of the Chief Justice, the senior-most judge of the Supreme Court administers the oath.<br>• Persons acting as interim Presidents must also take the oath of office. |

கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மணிப்பூர் — 11 முறை (2025 வரை)

- **அதிகம் விதிக்கப்பட்ட மாநிலங்கள்:** உத்தரப் பிரதேசம் (உ.பி.) (10 முறை) மற்றும் பஞ்சாப் (பி.பி.) (8 முறை).
- **மிகச் சமீபத்திய/அடிக்கடி:** மணிப்பூர் (MN) இதை மிக சமீபத்தில் கண்டுள்ளது (2025 நிலவரப்படி 11 முறை).

Kerala and Punjab are the States where the President's Rule was imposed for maximum number of times i.e., nine times in both States.

first time Punjab 1951
June 20

| State/ UT | No, of times imposed | Years of imposition |
|---|---|---|
| Manipur | 11 | 1967, 1967, 1969, 1973, 1977, 1979, 1981, 1992, 1993, 2001, 2025 |
| Uttar Pradesh | 09 | 1968, 1970, 1973, 1975, 1977, 1980, 1992, 1996, 1995, 2002 |
| Punjab | 08 | 1951, 1966, 1968, 1971, 1977, 1980, 1983, 1987 |
| Bihar | 08 | 1968, 1969, 1972, 1977, 1980, 1995, 1999, 2005 |

| குடியரசுத் தலைவர் நீக்கம் | Removal of the President |
| --- | --- |
| குடியரசுத் தலைவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம். அவர் சட்டப்பிரிவு 61இ ன் படி அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதன் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம். இவருக்கு எதிரான இக்குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானமாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் அவைக்கு வருகை புரிந்தவர்களில் நான்கில் ஒரு பங்கிற்குக் குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் தனது பதவிக்காலம் முடிந்தாலும் அவருக்குப் பின் ஒருவர் பதவியேற்கும் வரை அப்பதவியில் தொடரலாம். | The President may by writing under his hand addressed to the Vice-President, resign his office. The President may, for violation of the Constitution, be removed from office by impeachment in the manner provided in Article 61; The Impeachment action can be brought about in the form of resolution in either house of the Parliament. It must be supported by not less than One-Fourth of the total strength of the House for its introduction. The President shall, in spite of the conclusion of his term, continue to hold office until his successor enters upon his office. |
| • இந்திய அரசியலமைப்பில் சரத்து 61 ஆனது குடியரசுத் தலைவர் மீது குற்றம் சாட்டி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஒரு விரிவான நடைமுறைகளை தந்துள்ளது.<br>• இந்திய அரசியலமைப்பினை மீறியதற்காக மட்டுமே குடியரசுத் தலைவரின் மீது குற்றம் சாட்டி பதவி நீக்க இயலும்.<br>• அவை குடியரசுத் தலைவரின் மீதான பதவிநீக்க குற்றச்சாட்டினை பாராளுமன்றத்தின் இரு அவைகளில் | • Article 61 of the Indian Constitution provides a detailed procedure for impeaching the President.<br>• The President can be impeached only for violation of the Indian Constitution.<br>• The impeachment charges against the President can be initiated in either House of Parliament. |

| | |
|---|---|
| எந்தவொரு அவையில் வேண்டுமானாலும் முதலில் கொண்டு வரலாம். அந்த உறுப்பினர்களில் 1/4 பங்கு உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஒரு தீர்மானத்தின் வாயிலாக குற்றம் சாட்டப்பட வேண்டும். அந்த குற்றச்சாட்டின் நகலானது 14 நாட்களுக்கு முன்னதாகவே குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். 4 | The charges must be brought through a resolution signed by at least 1/4 of the members of that House. A copy of the charges must be given to the President at least 14 days in advance. |
| • தீர்மானம் கொண்டுவரப்பட்ட அவையின் மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கிற்கு குறையாத உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு அத்தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். | • The resolution must be passed by a majority of not less than 2/3 of the total membership of the House where it was introduced. |
| • அதன் பின் குடியரசுத் தலைவருக்கு எதிரான பதவி நீக்க குற்றச்சாட்டு மற்றொரு அவையில் விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். இந்த அவையில் குடியரசுத்தலைவர் கலந்து கொண்டு தனது தரப்பு விளக்கத்தினை அவை முன் எடுத்துக் கூறலாம். | • Thereafter, the impeachment charges against the President are taken up for investigation in the other House. In this House, the President can participate and present his explanation. |
| • குடியரசுத்தலைவர் தானாகவோ அல்லது வேறொரு நபரின் மூலமாகவோ அல்லது அவரின் வழக்கறிஞர் மூலமாகவோ தனது தரப்பின் விளக்கத்தினை கூறி தன்னை பாதுகாத்துக் கொள்ளலாம்.. | • The President can defend himself either personally, through another person, or through his lawyer. |
| • இரண்டாவது அவையில் பதவி நீக்க குற்றச்சாட்டு விசாரணையின் முடிவில் நடைபெறும் வாக்கெடுப்பில் அவையின் மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கு பெரும்பான்மையோடு குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அந்த தேதியில் இருந்து குடியரசுத்தலைவர் பதவி நீக்கப்படுகின்றார். | • If, at the end of the impeachment proceedings in the second House, the charges are accepted and the resolution is passed by a 2/3 majority of the total membership of that House, the President is removed from office from that date. |

| | |
|---|---|
| • இதுவரை எந்தவொரு குடியரசுத்தலைவரும் பதவிநீக்கம் செய்யப்படவில்லை.<br><br>• பாராளுமன்றத்தின் இரு அவைகளின் நியமன உறுப்பினர்கள் குடியரசுத்தலைவர் பதவி நீக்க குற்றச்சாட்டு தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது கலந்து கொள்வார்கள். ஆனால் குடியரசுத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்ளமாட்டார்கள்.<br><br>• மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் டெல்லி, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்கள் குடியரசுத்தலைவர் தேர்தலில் பங்கு பெறுவார்கள் ஆனால் பதவி நீக்கத்தின் போது பங்கு பெறுவதில்லை. | • So far, no President has been impeached.<br><br>• The appointed members of both houses of Parliament will participate in the vote on the impeachment motion against the President, but will not participate in the presidential election.<br><br>• Members of the state legislatures and the Delhi and Puducherry Assemblies will participate in the presidential election but will not participate in the impeachment. |
| **குடியரசுத் தலைவர் பதவி காலியாதல் மற்றும் அதனை நிரப்புதல் (சரத்து 62)**<br><br>பின்வரும் காரணங்களினால் குடியரசுத் தலைவர் பதவி காலியாகின்றது.<br>1. ஐந்து ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த நிலை<br>2. குடியரசுத் தலைவர் மரணத்தின் மூலம்<br>3. குடியரசுத் தலைவர் தானாக முன்வந்து இராஜினாமா செய்தல் மூலம்<br>4. பாராளுமன்றத்தினால் பதவி நீக்கம் செய்யப்படுவதன் மூலம்<br>5. குடியரசுத் தலைவர் தகுதியை இழந்தால் அல்லது அவரது தேர்தல் செல்லாது என அறிவிக்கப்பட்டால்<br><br>• குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவதற்குள் புதிய குடியரசுத் தலைவருக்கான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். | Vacancy in the Office of the President and its Filling (Article 62)<br><br>The office of the President becomes vacant due to the following reasons:<br>1. Upon completion of the five-year term<br>2. By the death of the President<br>3. By the President's voluntary resignation<br>4. By impeachment by the Parliament<br>5. If the President becomes disqualified or his election is declared void<br><br>• The election for a new President must be completed before the expiry of the term of the incumbent President. |

- மரணம், இராஜினாமா, பதவிநீக்கம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளில் பதவி காலியானால் அதிலிருந்து ஆறு மாதத்திற்குள் புதிய குடியரசுத் தலைவருக்கான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் புதிய குடியரசுத் தலைவர் அவர் பதவியேற்ற தேதியில் இருந்து 5 ஆண்டு காலம் பதவியில் இருப்பார்.
- புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு துணை குடியரசுத் தலைவர் தற்காலிக குடியரசுத் தலைவராக செயல்படுவார்.

- 1977-ம் ஆண்டு பக்ருதீன் அலி அகமது இறந்த காரணத்தினால் அன்றைய துணை குடியரசுத் தலைவராக இருந்த ஜாட்டி தற்காலிக குடியரசுத் தலைவராக செயல்பட்டார். பின்னர் ஆறு மாதத்திற்குள் நீலம் சஞ்சீவ ரெட்டி குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- குடியரசுத் தலைவர் பதவி காலியாக உள்ள போது துணை குடியரசுத் தலைவர் தற்காலிக குடியரசுத் தலைவராக பதவியேற்கும் நேரத்தில் இறந்தாலோ (அ) துணை குடியரசுத் தலைவர் பதவி காலியாக இருந்தாலோ (அ) துணை குடியரசுத் தலைவர் பதவி காலயாக இருந்தாலோ (அ) துணை குடியரசுத் தலைவர் தற்காலிக குடியரசுத் தலைவராக பதவியேற்ற பின்னர் ஆறு மாத காலத்திற்குள் இறந்தாலோ (அ) பதவி விலகினாலோ உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தற்காலிக குடியரசுத் தலைவராக செயல்படலாம்.
- 1969-ம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் இறந்ததால் அன்றைய துணைக் குடியரசுத் தலைவர் V.V.கிரி தற்காலிக குடியரசுத் தலைவராக பதவியேற்றார். பின்னர் இவர் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது பதவியை

- In case of unforeseen events such as death, resignation, or impeachment, the election for a new President must be completed within six months from the date the vacancy occurs. The new President so elected will hold office for a term of 5 years from the date of assuming office.
- During the interim period until a new President is elected, the Vice-President shall act as the interim President.
- In 1977, due to the death of Fakhruddin Ali Ahmed, the then Vice-President Jatti acted as the interim President. Subsequently, within six months, Neelam Sanjiva Reddy was elected as the President.
- If the Vice-President dies while acting as the interim President when the office of the President is vacant, or if the office of the Vice-President is vacant, or if the Vice-President dies or resigns within six months after assuming office as the interim President, the Chief Justice of the Supreme Court may act as the interim President.
- In 1969, following the death of President Zakir Hussain, the then Vice-President V.V. Giri assumed office as the acting President. Later, because he resigned from his position to contest the presidential election, the then Chief Justice of the Supreme Court, Hidayatullah, served as the

| | |
|---|---|
| இராஜினாமா செய்த காரணத்தினால் புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கும் வரை அன்றைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஹிதயத்துல்லா தற்காலிக் குடியரசுத் தலைவராக செயல்பட்டார். | acting President until a new President was elected. |
| **குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்**<br><br>1. நிர்வாக அதிகாரங்கள்<br>2. சட்டமன்ற அதிகாரங்கள்<br>3. நிதி அதிகாரங்கள்<br>4. நீதித்துறை அதிகாரங்கள்<br>5.நெருக்கடிகால அதிகாரங்கள்<br>6. வெளியுறவு அதிகாரங்கள்<br>7. இராணுவ அதிகாரங்கள்<br>8. தடுப்பு அதிகாரங்கள் (அல்லது) வீட்டோ அதிகாரங்கள்<br>9. இதர அதிகாரங்கள் | Powers of the President<br>1. Executive Powers<br>2. Legislative Powers<br>3. Financial Powers<br>4. Judicial Powers<br>5. Emergency Powers<br>6. Foreign Relations Powers<br>7. Military Powers<br>8. Veto Powers<br>9. Other Powers |
| 1. நிர்வாக அதிகாரங்கள்<br>• குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. சரத்து ஊன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் 77-ன் படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கைகளும் குடியரசுத் தலைவரின் பெயரிலே மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாகம் திறம்பட செயல்பட முக்கிய அலுவலகங்களுக்கான பல நியமனங்களை குடியரசுத் தலைவர் மேற்கொள்கின்றரர். அவை<br><br>1. பிரதம அமைச்சர்.<br>2. பிரதம அமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களை நியமித்து அவர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கின்றார்.<br>3. மாநில ஆளுநர்.<br>4. யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் மற்றும் நிர்வாகிகள். | 1. **Executive Powers**<br>• The Indian Constitution, under Article 77, vests all executive powers of the Central Government in the President. According to this article, every executive action of the Central Government must be taken in the name of the President. To ensure efficient administration, the President makes several appointments to key offices. These include:<br><br>1. The Prime Minister.<br>2. Appointing other ministers on the recommendation of the Prime Minister and allocating portfolios to them.<br>3. State Governors.<br>4. Lieutenant Governors and Administrators of Union Territories. |

| | |
|---|---|
| 5. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் இதர நீதிபதிகள்.<br>6. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் இதர நீதிபதிகள்.<br>7. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்.<br>8. தலைமை கணக்கு தணிக்கையாளர்.<br>9. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள்.<br>10. மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் & உறுப்பினர்கள்.<br><br>11 மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள்.<br>12. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம்.<br>13. தேசிய பழங்குடியினர் ஆணையம்.<br>14. தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.<br>15. ஆட்சி மொழி ஆணையம்.<br>16. நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.<br>17. முப்படைகளின் தலைமை தளபதி.<br>18. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர்.<br>19. சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர்.<br><br>• இந்திய தலைமை வழக்கறிஞரின் சம்பளம் மற்றும் இதரப் படிகளை முடிவு செய்பவர் குடியரசுத் தலைவர் ஆவார்.<br><br>• பிரதமரிடம் மத்திய அரசின் நிர்வாக விவகாரங்களையும் சட்டமுறை அறிக்கைகளையும் பற்றிய தகவல்களை கேட்டு தெரிந்து கொள்கின்றார். | 5. The Chief Justice and other Judges of the Supreme Court.<br>6. The Chief Justice and other Judges of the High Courts.<br>7. The Attorney General of India.<br>8. The Comptroller and Auditor General.<br>9. The Chief Election Commissioner of India and two Election Commissioners.<br>10. The Chairman and members of the Union Public Service Commission.<br><br>11. Ambassadors and High Commissioners to other countries.<br>12. The National Commission for Scheduled Castes.<br>13. The National Commission for Scheduled Tribes.<br>14. The National Commission for Backward Classes.<br>15. The Official Language Commission.<br>16. The Chairman and members of the Finance Commission.<br>17. The Commander-in-Chief of the Armed Forces.<br>18. The Chairman of the National Human Rights Commission.<br>19. The Chairman of the Minorities Commission.<br><br>• The President determines the salary and other allowances of the Attorney General of India.<br><br>• He can seek information from the Prime Minister regarding the administrative affairs and legislative proposals of the Central Government. |

| | |
|---|---|
| • இவர் மத்திய, மாநில உறவை வளர்க்கவும், ஒத்துழைப்பை பெருக்கவும் குழுவினை அமைக்கலாம்.<br><br>• இந்திய எல்லைக்குட்பட்ட எந்தவொரு பகுதியையும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகுதியாகவும், பழங்குடியின பகுதியாகவும் அறிவிக்கலாம்.<br><br>• எந்தவொரு விசயத்தையும் அமைச்சர்கள் குழுவின் கவனத்திற்கும், பரிசீலனைக்கும் கொண்டு வருவது இவரின் பணியாகும்.<br><br>• உச்சநீதிமன்றம் மற்றும் இதர சுயேட்சையான அமைப்புகளுக்கு நடைமுறை விதிகளை வரையறுப்பது மற்றும் அங்கீகரிப்பது இவரின் பணியாகும்.<br><br>• குடியரசுத் தலைவர் பிரதமரின் ஆலோசனையின்படி அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கின்றார், அதேபோல் பிரதமரின் ஆலோசனையின்படி அமைச்சர்களை நீக்கவும் செய்கின்றார்.<br><br>• குடியரசுத் தலைவர் அனைத்து நீதித்துறை நியமனங்களையும் உச்சநீதிமன்ற, தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பெயரிலே செயல்படுத்துகின்றார். | • He can constitute a committee to foster and enhance cooperation between the Central and State governments.<br><br>• He can declare any area within the territory of India as a Scheduled Area or a Tribal Area.<br><br>• It is his duty to bring any matter to the attention and consideration of the Council of Ministers.<br><br>• His duty is to define and approve the rules of procedure for the Supreme Court and other independent bodies.<br><br>• The President allocates portfolios to ministers on the advice of the Prime Minister, and likewise, removes ministers on the advice of the Prime Minister.<br><br>• The President makes all judicial appointments on the advice of the Chief Justice of the Supreme Court. |
| 2. சட்டமன்ற அதிகாரங்கள்<br><br>• குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறார்.<br>• பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார். | 2. Legislative Powers<br><br>• The President is an integral part of the Parliament.<br><br>• He addresses and inaugurates the new session of Parliament after the general elections. |

- குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டு முறை பாராளுமன்றத்தினை கூட்டுகின்றார். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடனே துவங்குகிறது. இரண்டு கூட்டத்திற்குமான கால இடைவெளி ஆறு மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
- குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தி அனுப்பலாம்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன.
- நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது.
- பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைக்கவோ. அல்லது முடிவுக்கு கொண்டு வரவோ குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
- மக்களவையின் பதவிக்காலமான 5 ஆண்டுகள் முடிவதற்குள் பிரதமரின் பரிந்துரையின் பேரில் அதனை கலைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு, (சரத்து 85))
- கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சமூகப்பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களை மாநிலங்களவைக்கு உறுப்பினர்களாக நியமிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். (சரத்து 80)
- மக்களவையில் ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை என்று கருதினால் மக்களவையில் ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தை சேர்ந்த 2 நபர்களை உறுப்பினராக நியமிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். (சரத்து 331)

- The President convenes Parliament twice a year. However, the first session of Parliament each year begins with his address. The time gap between the two sessions should not exceed six months.
- The President can send messages to either House of Parliament regarding any bill pending before it.
- All bills become law only after receiving the President's assent.
- A money bill cannot be introduced in Parliament without the President's approval.
- The President has the power to adjourn or prorogue a session of Parliament.
- The President has the power to dissolve the Lok Sabha before the completion of its 5-year term, on the recommendation of the Prime Minister (Article 85).
- The President has the power to nominate 12 members to the Rajya Sabha who have excelled in the fields of art, literature, science, sports, and social service (Article 80).
- If the President feels that the representation of the Anglo-Indian community in the Lok Sabha is not adequate, he has the power to nominate 2 members from the Anglo-Indian community to the Lok Sabha (Article 331).

| | |
|---|---|
| • சரத்து108-ன்படி மக்களவை சபாநாயகர் தனமையில் பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பவர் குடியரசுத் தலைவரே ஆவார்.<br>• குடியரசுத் தலைவர் ஒரு மசோதாவிற்கு அவருடைய ஒப்புதலை அளிக்கலாம் அல்லது அம்மசோதாவை பாராளுமன்றத்திற்கு மறு பரிசீலனைக்கு திருப்பி அனுப்பலாம்.<br>• அதே மசோதா மறு பரிசீலனைக்குப் பின் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு வரும்போது அவர் அதற்கு கட்டாயமாக மாக ஒப்புதல் வழங்கியாக வேண்டும். அதனை இரண்டாவது முறை மறுபரிசீலனைக்கு அனுப்ப இயலாது.<br>• நிதி மசோதா, மாநில உருவாக்கம், எல்லை மாற்றம், பெயர் மாற்றம் தொடர்பான மசோதாக்கள் இவரது முன் அனுமதி பெற்ற பின்னரே பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்படும்.<br>• பாராளுமன்ற கூட்டம் நடைபெறாத போது அவசர சட்டம் பிறப்பிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. (சரத்து 123)<br>• வெவ்வேறு பரிந்துரைகளையும் குழுக்களுடைய அறிக்கைகளையும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க செய்வது குடியரசுத் தலைவரின் பணியாகும்.<br>• மக்களவையின் இடைக்கால அவைத் தலைவரை நியமிப்பது இவரின் செயல்பாடாகும்.<br>• குடியரசுத் தலைவர் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் தொடர்பான சட்டங்களை நீட்டிப்பது, மாற்றியமைப்பது அல்லது நீக்குவது போன்றவற்றிற்கு அதிகாரம் கொண்டு உள்ளார்.<br>• சில குறிப்பிட்ட மாநிலச் சட்டங்கள் மீது முழுமையான மறுப்பு அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பயன்படுத்தலாம். | • According to Article 108, the President convenes the joint sitting of Parliament, presided over by the Speaker of the Lok Sabha.<br>• The President can give his assent to a bill or return the bill to Parliament for reconsideration. • When the same bill comes for the President's assent after reconsideration, he is obligated to give his approval. He cannot send it back for reconsideration a second time.<br>• Bills relating to finance, state formation, boundary changes, and name changes are introduced in Parliament only after obtaining his prior permission.<br>• The President has the power to issue ordinances when Parliament is not in session. (Article 123)<br>• It is the President's duty to ensure that various recommendations and committee reports are submitted to Parliament.<br>• Appointing the interim Speaker of the Lok Sabha is one of his functions.<br>• The President has the authority to extend, modify, or repeal laws related to ports and airports.<br>• The President can exercise absolute veto power over certain state laws. |

| | |
|---|---|
| • இந்திய கணக்கு தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளரின் அறிக்கை, மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் அறிக்கை, நிதி ஆணைய அறிக்கைகளை பாராளுமன்றத்தின் முன் குடியரசுத் தலைவர் சமர்பிப்பார். | • The President will submit the reports of the Comptroller and Auditor General of India, the Union Public Service Commission, and the Finance Commission before the Parliament. |
| 3. நிதி அதிகாரங்கள்<br>• பணமசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு பின்னரே பாராளுமன்றதில் அறிமுகப்படுத்தப்படும். (சரத்து 110)<br>• குடியரசுத் தலைவர் பண மசோதாவினை ஒரு போதும் மறுபரிசீலனைக்கு திருப்பி அனுப்ப இயலாது.<br>• மத்திய அரசின் ஆண்டு வரவு செலவு திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே மத்திய நிதி அமைச்சர் ]மக்களவையில் சமர்ப்பிக்கின்றார். (சரத்து 112)<br>• இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசர கால நிதியினை குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. அரசின் எதிர்பாராத செலவினங்களை அவசர நிதியிலிருந்து மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு.<br>• குடியரசுத் தலைவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையும் கொண்டுவர முடியாது.<br>• ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கின்றார் அல்லது மத்திய, மாநில அரசுகளின் வருவாயை பகிர்ந்து கொள்ள மாநிலங்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் முன்கூட்டியே நிதிக்குழுவினை அவர் அமைக்கிறார். (சரத்து 280)<br>• வருமான வரியிலிருந்து மாநிலங்களுக்கான பங்கினை முடிவு செய்வது மற்றும் அசாம், பீகார், ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏற்றுமதி | 3. Financial Powers<br>• A Money Bill can be introduced in Parliament only after the recommendation of the President. (Article 110)<br>• The President can never return a Money Bill for reconsideration.<br>• The Union Finance Minister presents the annual budget of the Central Government in the Lok Sabha only after obtaining the President's approval. (Article 112)<br>• The Indian Constitution has placed the Contingency Fund of India under the control of the President. He alone has the authority to meet unforeseen expenditures of the government from this fund.<br>• No demand for a grant can be made without the recommendation of the President.<br>• He constitutes a Finance Commission every five years, or earlier if the states request it, to recommend the distribution of revenue between the Union and the States. (Article 280)<br>• His duties include determining the states' share of income tax and deciding on the subsidies to be provided |

<table>
<tr>
<td>செய்யப்படும் சணல் பொருட்களுக்கான ஏற்றுமதி வரிகளுக்கு பதிலாக தரவேண்டிய மானியங்களை முடிவு செய்தல் இவரின் பணியாகும்.</td>
<td>in lieu of export duties on jute products exported from the states of Assam, Bihar, Odisha, and West Bengal.</td>
</tr>
<tr>
<td>

## 2.2 துணைக் குடியரசுத் தலைவர்

அரசியலமைப்பின் 63வது சட்டப்பிரிவு இந்திய துணைக் குடியரசுத் தலைவர் பதவியை வழங்குகிறது. நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவியைத் துணைக் குடியரசுத் தலைவர் வகிக்கிறார். அலுவலக முன்னுரிமையின் படி குடியரசுத் தலைவருக்கு அடுத்த தர நிலையில் இவர் உள்ளார். இப்பதவி அமெரிக்க துணைக் குடியரசுத் தலைவரின் பதவியைப் போன்றது. நாட்டின் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.



டாக்டர். ராதாகிருஷ்ணன் (முதல் துணைக் குடியரசுத் தலைவர்)

</td>
<td>

## 2.2 Vice-President

The vice-President occupies the second highest office in the country. He is accorded a rank next to the President in the official warrant of precedence. This office is modeled on the lines of the American Vice-President. Article 63 of the constitution provides for a Vice President of India. This office has been created to maintain the political continuity of the state.



DR. RADHA KRISHNAN (First Vice President of India)

### Qualification for the election as Vice President

</td>
</tr>
</table>